# சட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
மானியக் கோரிக்கை எண். 33

சட்டம்
2018–2019

**சி.வி. சண்முகம்**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2018

## கோரிக்கை எண். 33

## சட்டத்துறை

## 2018–2019 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு


| வரிசை எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–6 |
| 2. | சட்டக் கல்வி | 7–15 |
| 3. | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் | 15–19 |
| 4. | தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி | 19–23 |
| 5. | சான்றுறுதி அலுவலர்கள் | 24 |
| 6. | மாநில சட்ட ஆணையம் | 25–28 |

## 2018–2019 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

## கோரிக்கை எண்.33 சட்டத்துறை

**முன்னுரை**

'அமைதி, வளம் மற்றும் வளர்ச்சி' என்பது மாண்புமிகு முன்னாள் முதல்வர் அம்மா அவர்களின் தொலைநோக்கு பார்வையாகும். இச்சீரிய தொலைநோக்கினை அடைவதற்கு அரசு சோர்வின்றி செயல்பட்டு வருகிறது. நன்கு செயல்படும் சட்டமுறை அமைப்பும் சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடைபெறும் அரசும் அமைதியைக் கொண்டுவருவதற்கான நல்லதோர் ஆட்சிக்கு இன்றியமையாதவையாகும். சட்டத்தின் ஆட்சியானது சமுதாயத்திற்கும் அரசுக்கும் இடையேயான நல் உறவுக்கு இருதயம் போன்றதாகும். இது, நம்பிக்கையையும் பொறுப்பையும் உருவாக்குவதில் அடிப்படையாக அமைந்து ஓர் அரசுக்கும் அதன் குடிமக்களுக்கும் இடையே ஒரு சமுதாய உடன்படிக்கையை அமைக்கிறது. நல்ல ஆட்சியானது நிலைத்திருக்கும் மேம்பாட்டை வளர்ச்சியடையச் செய்வதில் இன்றியமையா பங்கினை வகிக்கிறது. இந்த அரசு, நியாயமானதும் நடுநிலையானதுமான சட்டங்களை,

சமமாகவும், கொள்கைமாறாமலும், முரண்படாமலும் பயன்படுத்தி அனைத்து குடிமக்களுக்கும் வளமையைக் கொண்டு வருகிறது.

இந்திய அரசமைப்பு நமது நாட்டின் உயர்ந்த சட்டமாக திகழ்கிறது. மாநில சட்டமன்றம், அரசமைப்பின் ஏழாம் இணைப்புப்பட்டியலில் உள்ள மாநிலப் பட்டியலிலும் ஒருங்கியல் பட்டியலிலும் குறித்துரைக்கப்பட்ட பொருள் எதனையும் குறித்து சட்டமியற்றுகிறது. ஆனால் ஒருங்கியல்பட்டியலின் கீழ்வரும் பொருளைப் பொறுத்தவரை, சட்ட மன்றத்தினால் இயற்றப்படும் சட்டம், அது குடியரசுத்தலைவரால் இசைவளிக்கப்பட்ட பின்பு சட்டமாகிறது. சட்ட மன்றத்தினால் நேரடியாக இயற்றப்படும் சட்டமானது, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் முக்கிய கொள்கைகளைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. சட்டத்தின் செயல்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான தொழில்நுட்ப விவரங்களும், நெறிமுறைகளும் அடங்கிய நடவடிக்கைகளை குறித்துரைக்க நிருவாக அதிகார அமைப்புகளுக்கு ஒப்படைவு செய்யப்படுகிறது. இவை அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகளால் வகுக்கப்படும் விதிகள் என்று வழங்கப்படும். அவ்வாறு வகுக்கப்படும் விதிகள் அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகளால்

இயற்றப்பட்டிருப்பினும், அவை சட்டத்துறையினால் கூர்ந்தாய்வு செய்யப்படுகின்றன. விதிகள் வகுக்கப்படுகையில், சட்டமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்புகள் ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்களை மீறாதிருக்கின்றனவா என்பதை உறுதி செய்யும் பொருட்டு, சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டத்தின் வகைமுறைகளின்படி வெளியிடப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் அனைத்தும் சட்டமன்றத்தின் விதிகள் ஆய்வுக்குழுவினால் ஆய்வு செய்யப்படுகின்றது.

அரசின் கொள்கை முடிவைச் சட்டமாக்க வேண்டும் என்று முடிவு செய்யும் பட்சத்தில், சட்டத்துறை, தொடர்புடையத் துறைகளுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கை முடிவுகளுக்கு சட்டவடிவமளித்து சட்டமுன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவிற்கு ஒப்புதல் அளித்த பின்பு, ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னர், அது சட்டமாகும் வரையில், சட்டத்துறையின் பணி தொடர்கிறது. சட்டமன்றப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும், சட்டமியற்றுவதற்கான அவசரத் தேவை ஏற்படுகிறவிடத்து,

அரசமைப்பின் 213–ஆம் உறுப்பின்படி அவசரச் சட்டம் வெளியிடப்படுகிறது. சட்டத்துறையின் பணி, அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப உருவாக்கி அதனை பிரகடனப்படுத்தி வெளியிடும் வரையில் தொடர்கிறது.

மேலும், சட்டத்துறையின் முக்கியப் பணியானது, சட்டப் பேரவைச் செயலகம் உள்ளடங்கலான தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் பிரச்சனை தொடர்பாக ஆலோசனை வழங்குவதாகும்.

மாநில அரசு ஒரு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத்துறையினால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன. இவை தவிர, மாநில அரசு ஒரு தரப்பினராக உள்ள ஆவணங்கள் அனைத்தையும் சட்டத்துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

**1965** ஆம் ஆண்டில் மாநில சட்ட ஆட்சிமொழி ஆணையம், சட்டச் சொற்களை உருவாக்கி சட்டச் சொல் அகராதியை வெளியிடுவதற்காகவும், மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழி பெயர்ப்பதற்காகவும், அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும் பிற பணி எதனையும் மேற்கொள்வதற்காகவும் அமைத்துருவாக்கப்பட்டது.

மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டத்துறையின் ஒரு பிரிவாக **1992** ஆம் ஆண்டு சட்டத்துறையுடன் சேர்க்கப்பட்டு, சட்டத்துறை கூடுதல் செயலாளரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இந்த பிரிவு சட்டத்துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வையிலும் மற்றும் கட்டுப்பாட்டின் கீழும் இயங்கி வருகிறது. சட்டத்துறையின் கீழ் இயங்கி வந்த மற்றொரு பிரிவான தமிழ்ப்பிரிவானது, சட்ட ஆட்சிமொழிப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது மையச் சட்டங்களையும், சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்படும் சட்டமுன்வடிவுகள், சட்டங்கள் மற்றும் அவசரச் சட்டங்கள்

உள்ளடங்கலாக மாநிலச் சட்டங்களையும் தமிழில் மொழிபெயர்த்து வருகிறது. மையச் சட்டங்களை மொழி பெயர்த்து புத்தக வடிவில் அச்சிடுவதற்கான செலவினை, மைய அரசு ஏற்றுக்கொள்கிறது. மாநிலச் சட்டங்களை மொழிபெயர்த்து அச்சிடும் செலவினை மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. மையச் சட்டங்களை மறுபதிப்பு மற்றும் மறுவெளியீடு செய்யும் இனங்களில், விற்பனையின் வாயிலாகக் கிடைக்கும் வருவாய் மாநிலஅரசுக்குச் சேர்வதால் அச்சிடும் செலவினை, மாநில அரசே ஏற்கவேண்டும் என மைய அரசினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பின்வருவன தொடர்பான நிர்வாகப் பணிகளையும் சட்டத்துறை செய்து வருகிறது:-

- சட்டக் கல்வி
- தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்
- தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி
- சான்றுறுதி அலுவலர்கள்
- மாநில சட்ட ஆணையம்

**சட்டக் கல்வி**

சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் சட்டக் கல்வித் துறையானது தமிழ்நாட்டில் 1953–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை உருவாக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, மென்மேலும் முன்னேற்றமடைய, இத்துறை தொடர்ந்து முயன்று வருகிறது.

சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, 1891–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி, 1974–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979–80–ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயமுத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996–97–ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரி, அரசு சட்டக் கல்லூரியாக டிசம்பர் 2006–இல் அறிவிக்கப்பட்டது. 2008–2009–ஆம் கல்வியாண்டு முதல்,

வேலூரில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டு, 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல், 5 ஆண்டு சட்டப்படிப்பும் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 2017–2018–ஆம் கல்வியாண்டு முதல் 5 ஆண்டு மற்றும் 3 ஆண்டு சட்டப்படிப்புகளுடன் மூன்று அரசு சட்டக் கல்லூரிகள், விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டு செயற்பட்டு வருகிறது. ஆக மொத்தம் தற்போது மாநிலத்தில் பத்து அரசு சட்டக் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன.

நீதியரசர் திரு ப.சண்முகம் விசாரணை ஆணையத்தின் பரிந்துரைக்கேற்ப, சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரியினை இடமாற்றம் செய்து, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், புதுப்பாக்கம் கிராமத்தில் ஒன்றும், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், பட்டறைப் பெரும்புதூர் கிராமத்தில் மற்றொன்றும் என, புதிதாக இரு அரசு சட்டக்கல்லூரிகள் துவங்க அரசால் மொத்தம் ரூ.117.31 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, புதிய சட்டக்கல்லூரிகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2017–2018** ஆவது கல்வியாண்டில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த மாணவர் இடங்களின் எண்ணிக்கை **9946.** இவற்றில், கல்லூரி வாரியாக ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன:-

| **வ. எண்** | **கல்லூரியின் பெயர்** | **மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| **1.** | டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி,சென்னை–**104.** (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | **2328** |
| **2.** | அரசு சட்டக் கல்லூரி, மதுரை. (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | **1438** |

| வ. எண் | கல்லூரியின் பெயர் | மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 3. | அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1440 |
| 4. | அரசு சட்டக் கல்லூரி, கோயமுத்தூர். (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1440 |
| 5. | அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி. (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1440 |
| 6. | அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு.(மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1060 |

| வ. எண் | கல்லூரியின் பெயர் | மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 7. | அரசு சட்டக் கல்லூரி, வேலூர். (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் இளநிலை சட்டப் படிப்புகள்) | 320 |
| 8. | அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம். (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் இளநிலை சட்டப் படிப்புகள்) | 160 |
| 9. | அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி. (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் இளநிலை சட்டப் படிப்புகள்) | 160 |
| 10. | அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம். (மூன்றாண்டுகள் மற்றும் ஐந்தாண்டுகள் இளநிலை சட்டப் படிப்புகள்) | 160 |

விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய புதிய அரசு சட்டக் கல்லூரிகள் தவிர்த்து ஏனைய ஏழு அரசு சட்டக் கல்லூரிகளும் சொந்தக் கட்டடங்களில் செயற்பட்டு

வருகின்றன. விழுப்புரம் அரசு சட்டக்கல்லூரிக்கென சொந்தக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.60.69 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. சென்னை, மதுரை, கோயமுத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் செயற்பட்டு வரும் அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் தனித்தனியாக விடுதி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரியில் மாணவியருக்கு மட்டும் விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது. அக்கல்லூரியில் மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேலூர் அரசு சட்டக்கல்லூரியில் புதிய மாணவியர் விடுதி கட்டடம் கட்ட ரூ.3.75 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**2017–2018** ஆவது கல்வியாண்டில் மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கு புதிய கலையரங்கம் மற்றும் புதிய நூலகக் கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.8.37 கோடியும், செங்கல்பட்டு அரசு சட்டக்கல்லூரிக்கென புதிய நூலகக் கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.4.45 கோடியும் மற்றும் அக்கல்லூரியில் உட்கட்டமைப்பு

வசதிகளை மேம்படுத்தும் பணிக்கு ரூ.1.89 கோடியும் அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2017–2018 ஆவது கல்வியாண்டில், தமிழகத்திலுள்ள அரசு சட்டக் கல்லூரிகளுக்கு 127 உதவிப்பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல், விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் புதிதாக துவக்கப்பட்ட மூன்று அரசு சட்டக் கல்லூரிகளுக்கும் மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் புதிதாக தொடங்கப்பட்ட 5 ஆண்டு சட்டப்படிப்பிற்கும் சேர்த்து 30 உதவிப்பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் அரசு சட்டக்கல்லூரிகளில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெறும் பன்னாட்டு மாதிரி நீதி மன்றப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் சார்பாக ஏழு மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அம்மாணவர்களுக்கு தலா **ரூ.75,000/–** (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) வீதம் வழங்கப்பட்டு வந்த நிதி உதவியினை **ரூ.1,00,000/–** (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கிட தமிழக அரசால் முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே நடப்பு **2018–**ஆம் ஆண்டு மேற்சொன்ன போட்டியில் கலந்து கொள்ள 7 மாணவர்களுக்கு மொத்தம் **ரூ.7,00,000/–** (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி மற்றும் மதுரை அரசு சட்டக்கல்லூரியில் தமிழ் மொழி வாயிலாக மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டப்படிப்புகள் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் தலா **ரூ.400/–** (ரூபாய் நானூறு மட்டும்) வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. **2017–2018** ஆம் கல்வியாண்டு முதல் திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு அரசு சட்டக்கல்லூரிகளில் புதிதாக தமிழ்வழி பயிற்று வகுப்புகள் அறிமுகப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. இக்கல்லூரிகளில் தமிழ் வழி பயிற்று வகுப்புகளில்

அனுமதிக்கப்படும் மாணவர்களும் மேற்சொன்ன ஊக்கத் தொகையினை பெறுவர்.

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக்கல்லூரிகளில் மாணவர்களின் நலனுக்காக புத்தக வங்கி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்**

சட்டக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலமாக சட்டம் பயிலும் மாணவர்கள் இன்றைய போட்டிகள் நிறைந்த உலகில் வேரூன்றி நிற்பதற்காக சட்டக் கல்விக்கென தமிழ்நாட்டில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், மாநில சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டது. மேலும், தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாக இது திகழ்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு சட்டக்கல்லூரிகளையும் தன்னகத்தே ஒருங்கிணைத்து செயற்பட்டு வருவதால் சட்டக் கல்வியின் தரம் மேம்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தற்போது பெருங்குடி, கொட்டிவாக்கம் கிராமத்தில் தரமணி இருப்புப்பாதை நிலையத்திற்கு மிக அருகில் 15 ஏக்கர் நிலத்தில், ரூ.61.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், இப்பல்கலைக்கழக விரிவாக்கப்பணிகளுக்காக கூடுதலாக 10 ஏக்கர் நிலம் அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகம் 2002–2003–ஆம் கல்வியாண்டிலிருந்து சட்டக்கல்வி பயிற்றுவிக்கும் பணியை, சீர்மிகு சட்டப்பள்ளி வாயிலாக துவக்கி, மூன்றாண்டு எல்.எல்.பி (சீர்மிகு) சட்டப்படிப்பு மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த பி.ஏ., எல்.எல்.பி (சீர்மிகு), பி.காம்., எல்.எல்.பி (சீர்மிகு), பி.பி.ஏ., எல்.எல்.பி (சீர்மிகு) மற்றும் பி.சி.ஏ., எல்.எல்.பி (சீர்மிகு) ஆகிய சட்டப்படிப்புகளை பயிற்றுவித்து வருகிறது. இத்தகைய புதிய சட்டப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டதாலும் மற்றும் ஏற்கெனவே பயிற்றுவிக்கப்பட்டு வந்த சட்டப்படிப்புகளில் இருக்கைகள் அதிகரிக்கப்பட்டதாலும், சீர்மிகு சட்டப்பள்ளியில் 2015–2016–ஆம் கல்வியாண்டிலிருந்து இளநிலை சட்டப்படிப்பு

இடங்கள் 320–இல் இருந்து 780–ஆக உயர்த்தப்பட்டது. மேலும் இப்பல்கலைக்கழகம் முதுநிலை சட்டப்படிப்பு மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகளையும் பயிற்றுவித்து வருகிறது. தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் வாயிலாக பல்வேறு முதுநிலை பட்டயப்படிப்புகள் மற்றும் சான்றிதழ் படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் சீர்மிகு சட்டபள்ளியில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு சிறப்பு நேர்வாகக் கருதி கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 2018–ஆம் ஆண்டு மார்ச் மாதம் வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் கலந்து கொள்வதற்காக இச்சீர்மிகு சட்டப்பள்ளியில் பயின்று வரும் ஐந்து மாணவர்களுக்கு தலா ரூ.75,000/– வீதம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அனைத்து வகையிலும் ஒரு முன்னுதாரணமாகத் திகழும் இப்பல்கலைக்கழகம் அதன் சீர்மிகு சட்டப்பள்ளி மூலம் இதுவரை 73 ஆராய்ச்சி மாணவர்களுக்கு சட்ட முனைவர் பட்டத்தினை வழங்கியுள்ளது. தற்போது 179 மாணவர்கள்

முனைவர் ஆராய்ச்சி படிப்பினை இப்பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டம் மற்றும் சட்டத்தோடு மிக நெருங்கிய தொடர்புடைய பாடங்களில் புதிதாக பணியமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக தென்னிந்தியாவில் தரம் வாய்ந்த பயிற்சி மையம் இல்லாத நிலையில், பணிமேம்பாட்டுத் திட்டத்தின் பலனை பெறுவதற்குத் தேவையான செயலாக்க மற்றும் புத்தாக்கப் பயிற்சிகளில் புதிய ஆசிரியர்கள் கலந்து கொள்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திலேயே ‘ஆசிரியர் பயிற்றுவிப்பு கல்லூரி’ அமைப்பதற்கான கருத்துரு புதுடெல்லி, பல்கலைக்கழக மானியக்குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு சட்ட அறிவினை ஏற்படுத்துவதற்காக, முறையான உட்கட்டமைப்புடன் கூடிய சட்ட அறிவு செயல் முறை மையம் ஒன்றினை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. இது தொடர்பாக தமிழக அரசானது ரூ.30 இலட்சம் நிதி ஒப்பளிப்பு அளித்துள்ளது. குற்றவியல் சட்டப் பாடம் பயிலும் மாணவர்கள் மற்றும்

ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம் தடயவியல் ஆய்வுக்கூடம் ஒன்றினை தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் நிறுவ தமிழக அரசு ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களுடனும், நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, கல்வி, பயிற்சி, சட்டம், நீதி, சமூக முன்னேற்றம் மற்றும் அவைகளோடு தொடர்புடைய பாடங்களில் ஆராய்ச்சி மற்றும் ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள் பரிவர்த்தனை போன்றவைகளில் மற்ற உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு அளிப்பதன் மூலமாக தன்னுடைய செயல்பாடுகளை விரிவாக்கம் செய்கிறது.

**தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி**

தமிழ்நாட்டில் தேசிய அளவிலான மிகச் சிறந்த சட்டக் கல்வி வழங்கும் பொருட்டு **2012–**ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி, மாநிலச் சட்டம் மூலம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி

உலகளாவிய காட்சியில் ஏற்பட்டு வரும் சூழ்நிலைமாற்றத்திற்கேற்ப, அதற்கு ஈடுகொடுத்து இணைந்து செல்லும் வகையில், சட்டத்தைக் கற்றல், சட்ட அறிவு பெறுதல், சட்ட வழிமுறைகளை அறிந்து கொள்ளுதல், வழக்காடும் திறமை, நீதி நிருவாகத்தில் திறமையைப் பளிச்சிடச் செய்தல் ஆகியவற்றைச் சட்டக்கல்வியின் மூலம் மேம்படுத்திப் பரப்புவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் **25** ஏக்கர் வளாகத்தில், ரூ.**79.22** கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி நிறுவப்பட்டது. மேலும், **2015–2016**–ஆம் நிதியாண்டில் இப்பள்ளிக்கு அறைகலன்கள், விளையாட்டு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்காக ரூ.**7.17** கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியில் ஐந்தாண்டு பி.ஏ., எல்.எல்.பி (சீர்மிகு) மற்றும் ஐந்தாண்டு பி.காம்., எல்.எல்.பி (சீர்மிகு) சட்டப்படிப்புகள் மொத்தம் **110** இடங்களுடன் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாணவர்கள் சேர்க்கையானது ஒரே பொது சட்டப்படிப்பு நுழைவுத் தேர்வு (Comman Law Admission Test) மூலம் நடைபெறுகிறது.

2017–2018–ஆம் கல்வியாண்டில் மேற்சொன்ன சட்டப்படிப்புகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு :-

| வ. எண். | படிப்பு | சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| (1) | பி.ஏ.,எல்.எல்.பி (சீர்மிகு) | தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள் | 24 |
| | | அகில இந்திய அடிப்படையில் | 27 |
| | | அயல்நாடு வாழ் இந்தியர்கள் | 03 |
| | | **மொத்தம்** | **54** |
| (2) | பி.காம்., எல்.எல்.பி (சீர்மிகு) | தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள் | 29 |
| | | அகில இந்திய அடிப்படையில் | 25 |
| | | அயல்நாடு வாழ் இந்தியர்கள் | 02 |
| | | **மொத்தம்** | **56** |

இப்பள்ளியில் தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் இடங்கள் தமிழ்நாடு மாநில இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி நிரப்பப்படுகின்றன.

2013–2014–ஆம் கல்வியாண்டு முதல், இப்பள்ளியில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கவும், மேலும், 2013–2014–ஆம் கல்வியாண்டு முதல் 2016–2017–ஆம் கல்வியாண்டு வரையில், அப்பள்ளியில் பயின்ற முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு, அவர்கள் ஏற்கனவே செலுத்தியுள்ள கல்விக்கட்டணத்தை, மீள்ஒப்பளிப்பு செய்தும் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த சட்டப்பள்ளியில் 2018–2019–ஆம் கல்வியாண்டு முதல் சட்ட முதுகலைப்படிப்பு துவக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2017–ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியின் நான்கு மாணவர்களுக்கு தலா

ரூ.75,000/– (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) அரசால் நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி கீழ்க்காணும் பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது:-

(1) தேசிய சட்டப் பல்கலைக்கழகம், புதுடெல்லி,

(2) இந்திய தேசிய சட்டப்பல்கலைக்கழகம், பெங்களூரு,

(3) இன்ஸ்டிடியூட் ஆப் இந்திய கம்பெனி செகரட்டரீஸ் அமைப்பு, புதுடெல்லி மற்றும்

(4) இந்திய பன்னாட்டு மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மை அமைப்பு, புதுடெல்லி.

மேலும், தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி கீழ்க்காணும் கூட்டமைப்புகளில் உறுப்பினராக உள்ளது:-

(1) இந்திய பல்கலைக்கழக கூட்டமைப்பு,

(2) இந்திய சமூக அறிவியல் கழகம், மற்றும்

(3) சாஸ்திரி இந்தோ–கனடியன் அமைப்பு.

**சான்றுறுதி அலுவலர்கள்**

**1952**–ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி (மையச்சட்டம் எண் **53/1952**) பொதுவான வணிக நடைமுறையில் முறையாவணங்களைக் குறித்தல், சான்றிடுதல் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். **29.01.2018** அன்று உள்ளபடி இந்த அரசால் சான்றுறுதி அலுவலர்களாக அமர்த்தப்பட்டு இம்மாநிலத்தில் செயல்படுபவர்களின் எண்ணிக்கை **1403** ஆகும். சான்றுறுதி அலுவலர்கள் விதிகள், **1956**, மைய அரசினால் திருத்தம் செய்யப்பட்டு, இந்திய அரசிதழின் அறிவிக்கை எண். G.S.R.429(E), நாள் **18.04.2016**–ன் மூலமாக தமிழ்நாட்டிற்கென வகுத்துரைக்கப்பட்டுள்ள மாநில அரசால் நியமனம் செய்யப்படவேண்டிய சான்றுறுதி அலுவலர்களின் எண்ணிக்கையை **2500** ஆக உயர்த்தியுள்ளது. எனவே, புதிதாக இம்மாநிலத்தில் **1097** சான்றுறுதி அலுவலர்களை நியமனம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாநில சட்ட ஆணையம்**

மாநில சட்ட ஆணையம், தமிழ்நாடு, உச்ச நீதிமன்ற ஒய்வு பெற்ற நீதிபதி, மாண்புமிகு நீதியரசர் திரு. சொக்கலிங்கம் நாகப்பன் அவர்கள் தலைமையில், **15.06.2017** அன்று அரசால் திருத்தியமைக்கப்பட்டது. மாநில சட்ட ஆணையத்தின் தலைவர் **19.06.2017** அன்று பதிவியேற்றார். மாநில சட்ட ஆணையத்தின் பதவியுரிமைக் காலமானது தலைவர் பொறுப்பேற்ற நாளிலிருந்து மூன்றாண்டு காலமாக இருக்கும். திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தில் ஆணையத்தலைவர் தவிர, முழுநேர உறுப்பினர்களும், பகுதிநேர உறுப்பினர்களும் மற்றும் முழுநேர உறுப்பினர் – செயலாளரும் அரசால் நியமிக்கப்பட்டனர்.

மாநில சட்ட ஆணையத்தின் செயற்பணிகளானது ஆங்கிலேய ஆட்சியின் போது இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் மற்றும் அதற்குப் பின்பு இயற்றப்பட்ட சட்டங்களையும் ஆய்வு செய்வதாகும் மற்றும் ஆணையத்தால் ஆய்வு செய்யப்பட்ட அந்தச் சட்டங்கள் இன்றைய சூழ்நிலைக்குப் பொருந்தத்தக்கனவாக உள்ளதா அல்லது இல்லையா என்பது பற்றியும் தனது கருத்தினை

அளிக்கும். மேலும், அந்தச் சட்டங்களுக்கு இணங்கிய வகையில் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை அரசுக்கு வழங்கும். உச்சநீதிமன்றத்தின் மற்றும் உயர்நீதிமன்றத்தின் பல்வேறு முடிவுகளுடன் மேற்சொன்ன சட்டங்கள் உடன்பட்டிருக்கிறதா என்பது பற்றியும் சட்ட ஆணையம் ஆய்வு செய்யும் மற்றும் அந்தச் சட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றியும் அரசுக்கு அறிவுறுத்தும். சட்ட ஆணையம் மேலும்,—

(அ) தற்போதுள்ள சட்டங்களில் உள்ள குறைகளை நீக்குவதற்கு பொருந்தத்தக்க மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை வழங்கும்;

(ஆ) பொருந்தத்தக்கதாகவுள்ள சமூக, பொருளாதார, சட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனையை வழங்கும்;

(இ) மாநிலங்களுக்கிடையேயான உறவுகளை மற்றும் மைய—மாநில உறவுகளுக்கான வழிவகைகள் பற்றிய ஆலோசனையை வழங்கும்;

(ஈ) நீதி நிருவாகச் சீர்திருத்தங்கள் அடிப்படையிலான சிறந்த மற்றும் உகந்த நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்கும் மற்றும் பரிந்துரைகளைச் செய்யும்; மற்றும்

(உ) மாநில சட்டங்களுக்கு மட்டுமில்லாமல் இந்த மாநிலத்திற்கு பொருந்தும் வகையிலிருக்கும் மையச் சட்டங்களுக்கும் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை வழங்கும்.

திருத்தியமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையம் தனது முதல் அறிக்கையை (பதின்மூன்றாம் அறிக்கையாக) **27.10.2017** அன்று அரசிற்கு சமர்ப்பித்துள்ளது. அதில், **1994 –** ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திற்கான **83** திருத்தச்சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு பரிந்துரைத்துள்ளது. **08.11.2017** அன்று சமர்பித்த தனது இரண்டாவது அறிக்கையில் (பதினான்காம் அறிக்கையாக) **1949 –** ஆம் ஆண்டு சென்னை ஆலியசந்தானா சட்டத்தை நீக்கறவு செய்வதற்கும் மற்றும் **14.12.2017** அன்று சமர்பித்த தனது மூன்றாவது அறிக்கையில் (பதினைந்தாம்

அறிக்கையாக) தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் சட்டங்கள் தொடர்பான வழக்கற்றுப்போன 36 சட்டங்களை நீக்கறவு செய்வதற்கும் ஆணையம் பரிந்துரைத்துள்ளது. மாநில சட்ட ஆணையத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக, மேற்கண்ட சட்டங்களுடன் நிருவாகரீதியில் தொடர்புடைய தலைமைச் செயலகத்திலுள்ள துறைகளோடு கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**சி.வி. சண்முகம்**
**சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்**
**சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**

********